Leasing out Quarries.

* 192 Q.—THIRU K. S. MANI (on behalf of Thiru M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any complaint has been received stating that the lease amount of the quarries was not paid to the concerned Panchayat even though G.O. Ms. No. 755, Rural Development and Local Administration Department, dated 30th April 1975 provides the right to the Panchayats for leasing out the quarries within their limits and for collecting the lease amount therefor; and

(b) if so, whether steps will be taken to pay the arrears also till date?

கற்பாறைகள் குத்தகை

திரு. கோ. சி. மணி (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு ஊராட்சி எல்லைக்குட்பட்ட கற்பாறைகளை (quarries) ஏலம் (குத்தகை) விடுகிற உரிமையும், குத்தகைத் தொகையை பெறுகிற உரிமையும் அந்தந்த ஊராட்சிகளுக்கே உரிமை உடையது என்ற, 30-4-1975ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண். 755—ன் படி அந்தந்த ஊராட்சிகளுக்குத் தொகை கொடுக்கப்படவில்லை என்று புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரையுள்ள பாக்கி தொகையையும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இரு ஊராட்சிகளிடமிருந்து புகார்கள் வந்துள்ளன.

(ஆ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

Street Lights in Anna Nagar.

*193 Q.—THIRU K. S. MANI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Tamil Nadu Housing Board, has paid certain amount to the Corporation of Madras for the installation of street lights in Anna Nagar, Madras;

(b) if so, the date on which the Housing Board paid the amount;

(c) whether the street lights have been installed; and

(d) if not, the reason therefor?

அண்ணா நகரில் தெரு விளக்குகள்

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை, அண்ணா நகர் பகுதியில் தெரு விளக்குகள் அமைக்கப்படுவதற்காக, ஒரு குறிப்பிட்ட தொகையை சென்னை மாநகராட்சிக்கு செலுத்தியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வீட்டு வசதி வாரியம் அத் தொகையைச் செலுத்தியது?

(உ) தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டனவா?

(எ) இல்லையெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) 1966–67ம் ஆண்டு முதல் 1977–78-ம் ஆண்டு வரை ரூ. 29,67,554 செலுத்தியுள்ளது.

(உ) இதுவரை 846 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. சி. மணி: அந்த பிளாக்கில் 3-வது பிரிவில் இதுவரை விளக்குப் போடப்படவில்லை என்று நேற்றுவரை நானே பார்த்திருக்கிறேன். நேற்றுவரை போடப்படவில்லை என்ற தகவலும் எனக்குக் கிடைத்திருக்கிறது, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படி அமைக்கப்படாத இடங்களில் புதிதாக எவ்வளவு நாட்களுக்குள் விளக்குகள் போட அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பகுதி 3, 4ல் விட்டுப்போன இடங்களில் 19 விளக்குகள் எரிய வைக்கப் பட்டுள்ளன. மீதம் 306 விளக்குகள் பொருத்தப்பட

1978 மார்ச் 20]

இருக்கின்றன. அவற்றில் 96 விளக்குக் கம்பங்கள் நடப்பட்டு விட்டன. மற்றவைகளுக்குத் தேவைப்படும் விளக்குக் கம்பங்களுக்குத் தேவையான புதை கம்பிகள் (underground cables) கைவசம் இருப்பு இல்லாததால்தான், இந்தப் பணி தொடங்கப்படவில்லை. அவைகளைத் தருவிக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாத மத்தியில் அவைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10-50)

திரு. கோ. சி. மணி: இந்த உத்தரவு வழங்கப்பட்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன? அந்தப் பொருள்கள் கிடைக்காததற்குக் காரணம் அரசாங்கத்தின் முயற்சியின்மையா அல்லது பொருள்கள் தட்டுப்பாடா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பொருள்கள் கிடைக்கவில்லை என்றுதான் குறிப்பில் இருக்கிறது. இவைகள் ஏப்ரல் மாதம் இறுதியில் கிடைக்கும் என்று தெரிகிறது. எப்போது உத்தரவு வழங்கப்பட்டது என்று குறிப்பில் இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: அண்ணா நகர் பகுதியிலே மட்டும்தான் குறைவாக இருக்கின்றனவா? சென்னை நகரில் பல பகுதிகளிலும் குறைவாக இருக்கின்றன என்று புகார்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒட்டுமொத்தமாக எங்கெல்லாம் தெரு விளக்குகள் இல்லையோ, அங்கெல்லாம் அமைப்பதற்குத் திட்டம் இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அமைக்க முயற்சிக்கலாம். இப்போது கேட்கப்பட்டுள்ள கேள்வி அண்ணா நகரைப் பற்றியதாக இருக்கிறது. அதனால்தான் அதற்கு மட்டும் பதில் குறிப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: எப்ரல் மாதம் இறுதிக்குள்ளாகவே கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏப்ரல் மாதத்தில் விளக்குகள் அமைக்கப்படுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.